## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 389/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.4** |
| Name | : | **சரண்குமார்** |
| Father's / Husband Name | : | **நல்லு** |
| Address | : | **சத்திரமனை, வேலூர்** |
| Age | : | 26/2024 |

**தேதி : 02.12.2024**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பி.இ. முடித்துவிட்டு சென்னையில் ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்துவருகிறேன். அ.சா1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்களை தெரியும். ஒரே ஊரை சேர்ந்தவர்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 03.09.2022 அன்று மதியம் 12.00 மணிக்கு மேல் நானும், பிரதாப்பும் சதீஸ் வீட்டிற்கு அருகில் நின்றக்கொண்டிருந்தோம். அப்போது பெரம்பலூர் போலீஸார் வந்து இருசக்கர வாகனம் காணாமல் போன இடத்தை பார்த்து விசாரணை செய்தார்கள். இடத்தை பார்த்து அருகில் உள்ள வீடுகளில் உள்ளவர்களின் பெயர்களை குறித்து கொண்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், பிரதாப்பும் சாட்சி கையெழுத்து போட்டோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்கள் எனக்கு சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டதில் என்ன எழுதியுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். இரண்டு, மூன்று பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை, ஒரே ஒரு கையெழுத்து மட்டும்தான் போட்டேன். 12.00 – 1.00 மணிக்கு கையெழுத்து போட்டிருப்பேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து வெற்றுதாளில் கையெழுத்து போட்டேன் என்றாலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ளவர்கள் உறவினர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து போட்டதால்தான் அதில் என்ன எழுதியிருக்கிறது என்று சரியாக சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. எழுதிய பேப்பரில்தான் கையெழுத்து போட்டேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.